Deposition of Witness
(Chapter:XVIII Code of Civil procedure)
In the Court of District Munsif,
Thiruvadanai.

Case No. O.S. No.42 /2015
Deposition of Witness of Plaintiff : PW1

| | | |
|---|---|---|
| Name | : | செல்வி |
| Father/Husband Name | : | சடாச்சாரம் |
| Village | : | ஆக்கலூர் |
| Taluk | : | திருவாடானை |
| Religion | : | இந்து |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 05th day of August 2022

<u>முதல் விசாரணை</u>

05.08.2022(முதல் விசாரணை)

சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி நிரூபண வாக்குமூலம் நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை எனது நீதிமன்ற முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

எனது தரப்பில் குறியீடு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள்...

| | |
|---|---|
| 1. | தாவா சொத்து உள்ளிட்ட சொத்துக்களுக்கு அழகு அம்பலம், சுப்பையா |

| | |
|---|---|
| | அம்பலம், காளிமுத்து அம்பலம் ஆகியோர்கள் பெயரில் உள்ள கூட்டு பட்டா (யூடிஆர்–ல் வழங்கப்பட்டது) அசல் **வா.சா.ஆ.1 ஆகும்.** |
| 2. | தாவாச் சொத்துக்கு வாதிகளால் செலுத்தப்பட்ட வரி ரசீது அசல் **வா.சா.ஆ.2 ஆகும்.** |
| 3. | தாவாச் சொத்துக்கு வாதிகளால் செலுத்தப்பட்ட வரி ரசீது அசல் **வா.சா.ஆ.3 ஆகும்.** |
| 4. | வாதிகள் தரப்பு வம்சாவழி ஜாபிதா அசல் **வா.சா.ஆ.4 ஆகும்.** |
| 5. | 19.07.1961 ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் **வா.சா.ஆ.5 ஆகும். (இந்த ஆவணம் அசல் இல்லாததால் எதிர் தரப்பு வழக்கறிஞர் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவித்தார்)** |
| 6. | 02.07.1997 ம் தேதியிட்ட 5 முதல் 13 பிரதிவாதிகள், 1 முதல் 4 பிரதிவாதிகளின் துணையுடனும் பழைய ஜமாத் நிர்வாகிகளுடனும் சேர்ந்து செய்து கொண்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6 ஆகும்.** |

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.